**தலைப்பு 159 – சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்து சமய விவகார அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்து சமய விவகார அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்து சமய விவகார அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்டம்பர் 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்து சமய விவகார அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) உபபிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்குகின்றன எனவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கட்டுநிதியின் ஆரம்ப மீதி ரூபா 4,923,582 என்பதுடன் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ஏனைய பெறுவனவுகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிச் செயலாற்றல் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டியமை. | குறிப்பிட்ட படிவத்தில் ஆரம்ப மீதி குறிப்பிடுவதற்கான இடமொன்று இல்லாதபடியால் அரச கணக்குகள் திணைக்களத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி முன்னால் அதைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திறைசேரிக் குறிப்புக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கட்டிடக் கிரயம் மற்றும் உபகரண மீதிகள் ரூபா 409,446,297 | நிதி நிலைமைக் கூற்று சரியாகத் தயாரிக்கப்பட வேண்டியமை. | கட்டிடக் கிரயம் மற்றும் உபகரண மீதிகளின் வேறுபாடு திருத்தப்படுவதற்காக மாற்றல் பத்திரங்கள் திறைசேரிக்கு இற்றை வரையில் வழங்கப்பட்டுள்ளது. |

என்பதுடன் நிதி நிலைமைகள் தொடர்பான கூற்றின் பிரகாரம் அது ரூபா 407,775,615 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 1,670,682 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 6,251,763 என்பதுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பரீட்சைமீதியின் பிரகாரம் ரூபா 7,835,840 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 1,584,077 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்ற தயாரிக்கப்பட வேண்டியமை. | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் வருமானமல்லாத பெறுவனவுகளாக ரூபா 6,251,763 இல் உள்ளடக்கப்படுவது பணமாகப் பெறப்பட்ட வருமானம் மற்றும் மானியங்கள் ஆகும். அத்துடை இவை அனைத்தும் பணமாகப் பெறப்பட்டவையாகும். ஆனால் பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்ட ரூபா 7,835,840 ஆன மதிப்பீடு உள்ளடக்குவது மேற்கூறப்பட்ட பணமாகப் பெறப்பட்டவை மற்றும் சம்பளங்களுக்குரிய வருமான குறியீடுகளுக்கு உரித்தான குறுக்குப் பதிவுகளில் பெறப்பட்ட ரூபா 5,826,611 வருமானமாகும். |
| (ஆ) காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் தனிப்பட்டோரின் சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 249,823,249 என்பதுடன் பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 251,414,216 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 1,590,967 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | சுற்றுலாத்துறைப் பிரிவினரால் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படும் போது மூலதனச் செலின் கீழான பராமரிப்புச் செலவு விடயம் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான செலவுகள் அதனுடன் கூட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சுற்றுலாத்துறைப் பிரிவின் இச்செலவுகளுக்குள் அடங்குவது ரூபா 162,075,202 மற்றும் வனசீவராசிகள் பிரிவின் செலவுகள் ரூபா 87,748,047 ஆகும். வருடத்திற்கான குறுக்குப் பதிவுகள் சீராக்கங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,590,967 ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் ஏனைய செலவு விடயங்களுக்காக செய்யப்பட்ட செலவுகள் ரூபா 3,916,333 என்பதுடன் பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 5,530,793 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 1,614,460 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டியமை. | ஏனைய செலவு விடயங்களுக்காக பணத்தினால் செய்யப்பட்ட செலவுகள் ரூபா 3,916,333 ஆகும். பரீட்சை மீதியின் பிரகாரம் அது ரூபா 5,530,793 ஆகும். அதன் பிரகாரம் வேறுபாட்டிற்கான காரணம் பரீட்சை மீதியில் உள்ளடக்கப்பட்ட குறுக்குப் பதிவாகும். குறுக்குப் பதிவுகளினால் செய்யப்பட்ட செலவு ரூபா 1,614,460 ஆகும். |
| (ஈ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவு ரூபா 7,929,478 என்பதுடன் ஒன்றிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் அது ரூபா 10,015,757 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 2,086,279 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | இம்மதிப்பீடு வேறு அமைச்சுக்களின் மூலம் அமைச்சிற்கு இடமாற்றலாகி வந்த உத்தியோகத்தரின் கடன் மீதிகள் தீர்க்கப்படுவதற்காக மாற்றல் பத்திரங்களின் மூலம் செய்யப்பட்டு வரவு வைக்கப்பட்டது. அதன் பிரகாரம் பணத்தினால் செய்யப்படாத மற்றும் மாற்றல் பத்திரங்கள் மூலம் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் கூட்டுத்தொகை ரூபா 2,086,279 ஆன இம்மதிப்பீடு காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. |
| (உ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் முற்பணங்கள் அறவிடப்பட்டமை ரூபா 335,293 என்பதுடன் ஒன்றிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் அது ரூபா 6,113,009 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 5,777,716 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் முற்பண அறவீடுகள் தொகையாக ரூபா 335,293 ஆனது பணமாக அறவிடப்பட்டமை. |
| (ஊ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் வைப்புக்கள் பெறுவனவு ரூபா 102,874,564 என்பதுடன் ஒன்றிணைந்த | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாகத் தயாரிக்கப்பட வேண்டியமை. | வைப்புப் பெறுவனவுகளில் வேறுபடுகின்ற ரூபா 190,368 ஆன மதிப்பீடு வைப்புக் கணக்கின் குறுக்குப் பதிவுகளின் பெறுவனவுகள் ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| | பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 103,064,932 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 190,368 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | | |
| (எ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் வைப்புக் கொடுப்பனவுகள் ரூபா 87,945,097 என்பதுடன் ஒன்றிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் அது ரூபா 88,082,567 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 137,470 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | வைப்புக் கணக்கின் குறுக்குப் பதிவுகள் மூலம் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 136,720 ஆன செலவுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படாமையினால் இவ்வேறுபாடு ஏற்பட்டிருந்தது. |
| (ஏ) | காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் பௌதீக சொத்துக்கள் கட்டுமானம் அல்லது கொள்வனவுகள் ரூபா 211,480,230 என்பதுடன் ஒன்றிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் அது ரூபா 220,062,851 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 8,582,621 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | முழுச் செலவுகள் மற்றும் பரீட்சை மீதியின் செலவுகளக்கிடையே வேறுபாடு காணப்படுவதானது வருட இறுதியின் போது செய்யப்பட்ட மாற்றல் பத்திரங்கள் மற்றும் குறுக்குப் பதிவுகளே காரணங்கள் ஆகும். |
| (ஐ) | காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் இறுதிக் காசு மீதி ரூபா 843,548 என்பதுடன் ஒன்றிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் அது ரூபா 1,381,683 ஆகும். | - மேற்படி - | ஒன்றிணைந்த பரீட்சை மீதியின் இறுதிக் காசு மீதி ரூபா 1,381,683 என்பதுடன் அதற்குள் பண மீதி மட்டும் குறுக்குப் பதிவுகள் உள்ளடக்கப்பட்டன. பிழையற்ற காசு மீதியே காசுப்பாய்ச்சல் கூற்றில் இறுதி காசு மீதி ஆகும். |

அதன் பிரகாரம் ரூபா 538,135 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.6.4 கட்டுநிதி மிகுதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கடந்த ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் கட்டுநிதிக் கணக்கு மீதி நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 4,923,582 ஆக மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 5,171,113 ஆகவும் காட்டப்பட்டிருந்தது. | கட்டுநிதிக் கணக்கு சரியாகத் தயாரிக்கப்பட வேண்டியமை. | 2018 ஆம் வருடத்தின் வனசீவராசிகள் அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட போது காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு செலவிடலின் கீழ் ‘‘ஏனைய செலவு விடயங்களுக்காக செய்யப்பட்ட செலவுகள்’’ உள்ளடக்கப்படுவதற்காகக் காட்டப்பட்டிராமையால் அச்செலவுகளின் கீழ் உள்ளடக்கப்படாமையுடன் அத்தொகை காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது பணத்தின் தேறிய வேறுபாடாக் கூட்டப்பட்டிருந்தமையினால் இவ் வேறுபாடு ஏற்பட்டது. |

### 1.6.5 கட்டுநிதி சீராக்கல் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வேறு திணைக்களங் களினால் செய்யப்பட்ட கொடுப்பனவுகள ரூபா 174,183,707 கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அது ரூபா 163,328,584 ஆகும். | கட்டுநிதிச் சீராக்கல் கணக்கு சரியாகத் தயாரிக்கப்பட வேண்டியமை. | இவ்வேறுபாட்டிற்கு காரணம் வருட இறுதியின் போது மாற்றல் பத்திரங்களின் மூலம் செய்யப்பட்ட கணக்குச் சீராக்கங்கள் கருத்திற் கொள்ளப்பட்டிருந்தமை ஆகும். |
| (ஆ) வேறு திணைக்களங் களுக்குச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா | கட்டுநிதிச் சீராக்கல் கணக்கு சரியாக தயாரிக்கப்பட | கட்டுநிதி சீராக்கல் கணக்கு இணக்கப்படம் போது நிறுவனத்திற்காக செய்யப்பட்ட கொடுப்பனவுகள் குறிப்பிடப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | 5,239,724 என்பதுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அது ரூபா 5,530,793 ஆகும். | வேண்டியமை. | போது தவறுதலாக சுற்றுலாத் துறைப் பிரிவினால் வரவுத் தொகை உள்ளடக்கப்பட்டிராமை. |
| (இ) | முற்பண ''பீ'' கணக்கில் கொடுப்பனவுகள் ரூபா 2,086,280 என்பதுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அது ரூபா 11,393,257 ஆகும். | - மேற்படி - | முற்பண ''பீ'' கணக்கின் கொடுப்பனவுகளாக காட்டப்பட்டிருந்த ரூபா 2,086,280 ஆன அமைச்சிற்கு இடமாற்றலாகி வந்த உத்தியோகத்தரின் கடன் மீதிகள் தீர்க்கப்படுவதற்காக செய்யப்பட்ட வரவுப் பதிவுகளாகும். கணக்காய்வினால் குறிப்பிடப்பட்ட ரூபா 11,393,257 ஆனது முன்னைய இரு அமைச்சுக்களுக்கும் ஒன்றிணைக்கப்பட்டபோது ஆரம்ப மீதி 159 தலைப்பிற்கு மாற்றுவதற்காகத் திறைசேரியினால் செய்யப்பட்ட வரவுப் பதிவாகும். |

### 1.6.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2003 இன் மார்ச் 28 ஆந் திகதிய MF/TR/1/2003 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | வனசீவராசிகள் பிரிவினால் சுற்றறிக்கை ஏற்பாடுகள் கருத்திற் கொள்ளப்படாது ரூபா 170,000 மாதாந்த வாடகை மற்றும் சாரதி மேலதிக நேரம் உள்ளடங்கலாக 3 வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 3,207,929 செலவிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் சாரதி இன்றி கொடுப்பனவு செய்ய வேண்டிய உச்சக் கட்டணம் ரூபா 40,000 ஆகும். | சைட்டீஸ் பிரதேசச் செயலகத்தின் கடமைகளுக்காக வாகனம் வாடகைக்கு அமர்த்துவதற்கு புத்தசாசன அமைச்சின் செயலாளரின் அனுமதி பெறப்பட்டிருந்தது. வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்களுக்காகப் பாரிய தொகையொன்று செலவிடப்பட்டமையினால் உடன்படிக்கை கைவிடப்பட்டது. சுற்றுலாத்துறை, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சிற்கு உரித்தான வாகனம் சைட்டீஸ் கடமை அலுவல்களின் நிமித்தம் முன்னுரிமை அடிப்படையில் சாரதியுடன் பெறப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மூலதனச் செலவு விடயங்கள் 03 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 75,500,000 ஆன மொத்த ஒதுக்கங்களும் உபயோகிக்கப் படாமல் முழுதாக சேமிக்கப்பட்டிருந்தன | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியமை. | இராஜாங்க அமைச்சர்கள் காலத்திற்குக் காலம் மாற்றமடைந்தமை, நிலையான சொத்துக்கள் பெறுவதற்கான தேவைகள் ஏற்படாமை, மன்னார் மடுப் பிரதேசத்தில் குறைந்த செலவிலான வீடுகளின் அளவு 144 வரையில் குறைக்கப்பட்டமை மற்றும் உலக வங்கிக் கடனின் கீழ் செயற்படுத்தத் திட்டமிடப்பட்ட சுற்றுலாத்துறை அபிவிருத்தி செயற்திட்டம் பிற்போடப்பட்டமை போன்ற காரணங்களினால் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) மூலதனச் செலவு விடயங்கள் 05 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கங்களில் தடுத்து வைக்கப்பட்டுக் குறைக்கப்பட்டதன் பின்னர் கூட்டுத் தொகை ரூபா 180,933,000 ஆன தேறிய ஒதுக்கங்களின் கூட்டுத்தொகை ரூபா 56,705,638 ஆனது மட்டுமே உபயோகிக்கப்பட்ட காரணத்தினால் ஒதுக்கங்களில் ரூபா 124,227,362 ஆனது சேமிக்கப்பட்டிருந்தது இது முழு ஒதுக்கத்தில் நூற்றுக்கு 53 வீதத்திலிருந்து நூற்றுக்கு 89 வரையான வீச்சைக் கொண்டிருந்தன. | - மேற்படி - | இராஜாங்க அமைச்சர்கள் காலத்திற்குக் காலம் மாற்றமடைந்தமை, சொத்துக்கள் கொள்வனவிற்காக அமைச்சர்களின் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமை, 06 பழைய கோட்டைகள் அபிவிருத்தி செய்தல் தொடர்பாக ரூபா 190 மில்லியன் வரவு செலவுத் திட்ட ஒதுக்கம் பெறப்பட்டதுடன் அதில் ரூபா 90 மில்லியன் திறைசேரியின் அறிவித்தலின் பிரகாரம் தடுத்து வைக்கப்பட்டதுடன் மற்றும் புகையிரத நிலையங்கள் அபிவிருத்தி செய்யும் போது தொல்பொருள் பிரதேசமாக வெளியிடப்பட்டமைக்காக ரூபா 50 மில்லியன் ஒதுக்கத்திற்காக ரூபா 49.2 மில்லியன் கடன்பாடுகளுடன் செய்யப்பட்டமை ஆனால் கணக்கில் காட்டப்படும் போது ரூபா 8.7 மில்லியன் இருந்தமை போன்ற காரணங்களினால் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மூலதனச் செலவு விடயங்களில் தடுத்து வைத்தலைக் கருத்திற் கொண்ட பின்னர் முழுத் தேறிய ஒதுக்கம் ரூபா 126,000,000 என்பதுடன் உள்ளபடியான செலவுகள் ரூபா 133,435,067 விஞ்சியதாக ஆக தேறிய ஒதுக்கத்தை விஞ்சியதாக ரூபா 7,435,067 அதாவது நூற்றுக்கு 6 வீதம் செலவிடப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியமை. | செலவு விடயங்களினுள் கட்டாயச் சேமிப்பு செய்யப்பட வேண்டியதாக திறைசேரியினால் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | வனசீவராசிகள் பிரிவின் 05 செலவு விடயங்களின் முழு தேறிய ஒதுக்கத்தில் செலவுகள் கழிக்கப்பட்ட பின்னர் சேமிப்பு ரூபா 323,465,750 என்பதுடன் அது நூற்றுக்கு 51 இலிருந்து நூற்றுக்கு 100 வீதத்திற்கு இடையிலான வீச்சைக் கொண்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியமை. | வனசீவராசிகள் பிரிவு வேறு கட்டிடத்திற்கு கொண்டு செல்லப்பட்ட போது அவ்வமைச்சினால் கட்டிட வாடகைக் கொடுப்பனவு, வேறு அமைச்சின் மேலதிகமான அலுவலக உபகரணங்கள் பாவனைக்கு எடுக்கப்பட்டமை, மூலதனச் செலவுகளின் செலவு மட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் CITES உச்சி மாநாடு இலங்கையில் நடைபெறமாட்டாதென தீர்மானம் எடுக்கப்பட்டமை போன்ற காரணங்களினால் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டன. |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் அறிவுறுத்தலின் பிரகாரம் இணங்காது 07 செலவு விடயங்களுக்கு ரூபா 103,073 ஆன சேமிப்பானது ரூபா 528,650 இனால் விஞ்சப்பட்டு பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | முன்னைய வருடத்தில் தீர்க்கப்படாத குறிப்பிட்ட பற்றுச்சீட்டுக்கள் அடுத்த வருடத்தின் போது தீர்க்கப்பட வேண்டி ஏற்படுகின்றது. மேலும் நிதிப்பிரமாணம் 94(2) இன் கீழ் வருடாந்த மீண்டெழும் சேவைகள் மற்றும் வழங்கல்களுக்காக இம்முறையில் கடப்பாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகின்றன. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல் மற்றும் பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | CITES உடன்படிக்கையின் பிரகாரம் CITES செயலக காரியாலயத்திடமிருந்து அறவிட வேண்டிய அ.டொ. 517,235 ஆன தொகை கணக்காய்வு தினம் வரையில் அறவிடப்படவில்லை. | விரைவில் குறிப்பிட்ட தொகையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | ஹொஸ்ட் ஒப்பந்தத்தின் பிரகாரம் கொடுக்கப்பட்ட பணத்தில் ஆரம்ப செலவுகள் குறைக்கப்பட்டு மிகுதிப் பணம் வழங்கப்படுவதற்கு உடன்பட்டிருந்ததுடன் அத்தொகையைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ரூபா 87.9 மில்லியன் கிரயமான வாயுச்சீராக்கி மற்றும் Marquee வாடகைக்குப் பெறுவதற்காக 2019 ஏப்ரல் மாதத்தில் வழங்குநருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டமையுடன் 2019 யூலை மாதத்தில் அவற்றுள் ரூபா 20 மில்லியன் ஆன முற்பணத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடப்பட வேண்டியதாக ரூபா 25.06 மில்லியன் மட்டுமே காட்டப்பட்டிருந்தது. இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்பட்டன. | | |
| (i) | 2016 ஆம் வருடத்திலிருந்து வடிவமைப்பு குறைபாட்டினால் 2019 பெப்ரவரி மாதத்தில் இந்த உத்தரவு ஒப்படைக்கப்பட்டது. | செய்யப்பட்ட மேலதிகச் செலவு தொடர்பாக பொறுப்பான தரப்பினரை இனங்கண்டு தேவையான | சைட்டீஸ் உச்சி மாநாட்டில் விரைவில் முடிக்கப்பட வேண்டிய பாரியளவு கருமங்கள் காணப்பட்டமை மற்றும் குறுகிய காலத்தினுள் அத்தேவையைப் பூர்த்தி செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | விரைவில் இவற்றை முடிப்பதற்காக ரூபா 26,451,150 ஆன கிரயத்திற்கு முடிக்கப்பட முடியுமான வேலைக்கு ரூபா 36,695,350 ஆன செலவு செய்யப்பட்டு முடிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மேலதிக மேலதிக நேரமாக ரூபா 10,244,200 கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. | நடவடிக்கைகளை எடுக்க வேண்டியமை. | ஏற்பட்டமையினால் அரசின் தொழிற்சாலைகள் சாதாரணமாக வேலை செய்யக்கூடிய காலத்தினுள் உரிய கருமங்கள் முடிவுறாமையினால் அதற்காக மேலதிக நேரச் சேவை பெறப்பட வேண்டி ஏற்பட்டமையால் அதன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. |
| (ii) | தற்காலிக கட்டிடத்தை நிறுவுவதற்கும் மற்றும் அகற்றுவதற்குமாக சர்வதேச மனுக்கோரலின் போது அது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.2.2 மற்றும் 3.1 ஆம் பிரவுகளுக்கு முரணாகக் காணப்பட்டிருந்தது. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். இவ்விடயம் இவ்வமைச்சிடம் கையளிக்கப்பட்ட போது உச்சி மாநாடு மிகவும் குறுகிய காலமாக இருந்தமை, தேசிய போட்டி மனுக்கோரல் ஆவணங்களை மிகக்குறுகிய காலத்தில் மேம்படுத்தி அவற்றைச் சர்வதேச போட்டி ஏல ஆவணங்களாக மாற்ற வேண்டி ஏற்பட்டது. இப்பெறுகையைத் தவிர வேறு பல சிக்கலான கொள்வனவுகள் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமை போன்ற காரணங்களினால் மீதியாக இருந்த குறுகிய காலப்பகுதியினுள் உகந்த முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

## 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உச்சி மாநாட்டின் பின்னர் கிரயம் நூற்றுக்கு 50 வீதமானவை செலுத்தப்பட்டு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தினால் | முறையான உடன்படிக்கையுடன் வெளித் தரப்பினருடன் ஒப்பந்தங்களுக்கு வர வேண்டும். | உச்சி மாநாடு இந்நாட்டில் நடாத்தப்படாமைக்கான தீர்மானம் எடுக்கப்பட்ட காரணத்தினால் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு |

| | | | |
|---|---|---|---|
| | இதைப் பொறுப்பேற்பதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. எனினும், இது தொடர்பாக அமைச்சு மற்றும் நிறுவனத்துடன் எவ்வித உடன்படிக்கையும் கைச்சாத்திடப் படாமையினால் இக் கொள்வனவுகள் நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்தன. | | மண்டபத்திற்கு கிடைக்காமையால் பணம் இல்லாமல் பணம் செலுத்த முடியாதென்ற அறிவிப்பினால் இக்கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படவில்லை. |
| (ஆ) | முப்படையினரைப் பயன்படுத்தி தற்காலிக கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 105,700,000 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் பௌதீக ரீதியாக கணிப்பீடு செய்யப்படாமையுடன் அதற்கான இருப்புச் சான்றிதழின் பிரதிகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | குறிப்பிட்ட பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. | உச்சி மாநாட்டின் நானாவித நடவடிக்கைகள் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட துணைக் குழுக்களின் தீர்மானங்களின் அடிப்படையில் இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படைக்கு ஒப்படைக்கப்பட்டதுடன் அந் நிறுவனங்களின் இருப்பு பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டன. |

## 3.3 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அரச நிதி, வருமானம், முத்திரை மற்றும் சாமான்களுக்குப் பொறுப்பானவர்கள் மற்றும் நிர்வாக ரீதியாகப் பொறுப்பு வாய்ந்த மற்றும் அரச கணக்கிற்குரிய பொறுப்பளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பிணை அதிகாரச்சட்டத்திற்கு இணங்க பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் குறிப்பிட்ட உத்தியோகத்தர் பிணை வைக்க வேண்டியமை. | பிணை வைக்கும் நடைமுறை இன்றும் முடிக்கப்படவில்லை என்பதுடன் இற்றை வரையில் பொதுச் சேவை பரஸ்பர உத்தரவாதச் சங்கத்தின் மூலம் குறிப்பிட்ட பிணை வைத்தல் செயன்முறைகள் தொடங்கப்பட்டுள்ளது. |